01

# பொருளியல்

## அலகு ரீதியான மீட்டல் செயலட்டைகள்

## தரம் 12

## பொருளாதார முறைமையொன்றின் அடிப்படை.

## கட்டமைக்கப்பட்ட வினாக்களுக்கான விடைகள்

COMMERCE & BUSINESS STUDIES BRANCH

01.

1. (அ) பொருளாதாரமல்லாப் பண்டம் என்பது இயற்கையினால் இலவசமாக வழங்கப்படுவதும் அமையச்செலவு அற்றதுமான, பொருட்கள் சேவைகளின் உற்பத்திக்கு பயன்படுத்தக்கூடிய வளமாகும்.

   (ஆ) நிலம்
   உழைப்பு
   மூலதனம்
   முயற்சி/தொழில் முனைவு

2. முயற்சி என்பது பொருளாதாரத்தில் சிதறிக்கிடக்கும் உற்பத்தி காரணிகளை ஒருங்கிணைத்து, செயற்படுத்தி கட்டுப்படுத்துதல் மற்றும் உற்பத்தி பற்றிய தீர்மானம் எடுப்பதாகும்.

   **முக்கிய செயற்பாடுகள்**
   1. உற்பத்தி பற்றிய தீர்மானம் எடுத்தல்
   2. உற்பத்தி நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல்
   3. புதியனவற்றை அறிமுகம் செய்தல்
   4. அபாயத்தை எதிர்கொள்ளல்

3. (அ) அருமை

   அருமை என்பது எல்லையற்ற மனித தேவைகளை பூர்த்தி செய்வதற்கு சமூகத்தில் காணப்படும் வளங்கள் பற்றாக்குறையாக காணப்படுவதாகும்.

   அமையச் செலவு /சந்தர்ப்பச்செலவு

   அமையச் செலவு என்பது பல தெரிவுகளில் இருந்து ஒரு விருப்பத்தைத் தேர்ந்தெடுப்பதற்கு தியாகம் செய்ய வேண்டிய அடுத்த மிகச் சிறந்த தெரிவாகும்.

   (ஆ) அருமையான வளங்களில் மாற்றுப்பயன்பாடு காணப்படுவதால் ஒரு சந்தர்ப்பத்தில் ஒரே ஒரு மாற்றீட்டை தேர்ந்தெடுப்பதும் ஏனைய பயன்பாடுகளை கைவிட வேண்டும். எனவே இவ்வாறு தியாகம் செய்யப்படும் சிறந்த மாற்று வாய்ப்பு அமையச்செலவாகும்.

   எனவே வளங்களில் அருமை மற்றும் மாற்று பயன்பாடுகள் இருப்பதானது ஓர் தெரிவுக்கு வழிவகுக்கிறது. எனவே அமையச்செலவு ஏற்படுகிறது.

4. **சந்தைப் பொருளாதாரம்**
   - சொத்துரிமை தனியார் துறைக்கு சொந்தமானது
   - விலைப் பொறிமுறை அடிப்படை பொருளாதார பிரச்சினைகளை தீர்க்கிறது.
   - பொருள் ரீதியான பிரதிபலன்கள் கொண்ட ஊக்குவிப்புக்கள்
   - தனியார் நிறுவன அமைப்புகள் காணப்படும்.
   - குறைந்த அரச தலையீடுகள் காணப்படும்.

**கட்டளைப் பொருளாதாரம்**

- சொத்துரிமை பொதுத்துறைக்கு சொந்தமானது.
- மையப்படுத்தப்பட்ட திட்டமிடல் குழு அடிப்படை பொருளாதார பிரச்சினைகளை தீர்க்கிறது.
- அதிகார அடிப்படையிலான ஊக்குவிப்புக்கள்
- அரச நிறுவன அமைப்பு காணப்படும்
- அரசின் கடுமையான தலையீடுகள் காணப்படும்

5. • ஏற்கமுடியாது. உற்பத்தித்திறன் என்பது குறைந்தபட்ச உள்ளீட்டில் அதிகபட்ச வெளியீட்டை பெறுவதாகும்.

   • இங்கு நிறைதொழில்மட்டம் மற்றும் பூரண வேலைவாய்ப்பு நிலை காணப்படும்.

   • பொருளாதார செயற்திறன் என்பது சமூகத்தின் விருப்பத்தின் முக்கியத்துவத்திற்கேற்ப பொருத்தமான உற்பத்திக் கலவையை உருவாக்குவதாகும்.

   எனவே பொருளாதார செயற்திறன் இருப்பதற்கு, உற்பத்தி செயற்திறனும், வள ஒதுக்கீட்டு செயற்திறனும் காணப்படல் வேண்டும்.

   வள ஒதுகீட்டு செயற்திறனின் போது P=MC காணப்படும்.

02.

1. – எதை, எந்தளவு உற்பத்தி செய்வது?
   – எவ்வாறு உற்பத்தி செய்வது?
   – யாருக்கு உற்பத்தி செய்வது?

2. (அ) உற்பத்தி சாத்திய வளையியானது, ஒரு நாடு தரப்பட்ட அளவு வளங்களை கொண்டு, தற்போதுள்ள தொழிநுட்பத்தின் கீழ் அதிகபட்ச உற்பத்தித்திறனுடன் ஈடுபட்டால் இரண்டு வகையான பண்டங்களை உற்பத்தி செய்யக்கூடிய பல்வேறு மாற்று உற்பத்தி சேர்க்கை புள்ளிகளை குறித்து காட்டும் கோடாகும்.


   (ஆ) • வளங்களின் அளவு நிலையானது
   • தொழிநுட்பம் நிலையானது
   • இரு பண்ட வகைகள் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது.
   • வளங்கள் பூரணமாகவும் உச்ச வினைத்திறனுடனும் பயன்படுத்தப்படுகிறது.


3.

| பொருளாதார பிரச்சினை | சந்தைப் பொருளாதாரம் | கட்டளைப் பொருளாதாரம் |
|---|---|---|
| 1. எதை, எந்தளவு உற்பத்தி செய்தல் | • அதிக விலை, இலாபம் உள்ள பொருளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. | • மத்திய திட்டமிடல் குழுவின் உத்தரவுகளின் படி பொருள் தேர்வு செய்து உற்பத்தி இடம் பெறுகிறது. |
| 2. எவ்வாறு உற்பத்தி செய்தல் | • குறைந்த செலவிலான உற்பத்தி தொழிநுட்பம் தேர்வு செய்யப்படுகிறது. | • மத்திய திட்டமிடல் குழுவின் உத்தரவுகளின் படி உற்பத்தி நுட்பம் தேர்ந்தெடுக்கப்படுகிறது. |
| 3. யாருக்காக உற்பத்தி செய்தல் | • கொள்வனவு செய்யும் சக்தியின் அடிப்படையில் உற்பத்திகள் விநியோகிக்கப்படுகிறது. | • வருமானம் மற்றும் விலை நிலைகளின் அடிப்படையில் அரச கட்டுப்பாட்டின் மூலம் உற்பத்தி விநியோகிக்கப்படுகிறது. |

COMMERCE & BUSINESS STUDIES BRANCH


4. (அ)




கேள்வி குறைந்து உற்பத்தி குறையும் போது பொருளாதார மந்த நிலை ஏற்படுகிறது. எனவே உற்பத்தி கலவையை எல்லைக்குள் மாற்றுவதன் மூலம் பொருளாதார மந்த நிலை குறிக்கப்படுகிறது.

(ஆ)




அதிகரித்து வரும் வேலையின்மை வளங்களை குறைத்து பயன்படுத்துவதற்கு வழிவகுக்கிறது. உற்பத்தி புள்ளியை A இருந்து B நகர்த்துவதன் மூலம் குறிப்பிடப்படுகிறது.

5. - தகவல் மற்றும் சமிஞ்சைகளை வழங்குதல்.
   - ஊக்குவிப்பை வழங்குதல்
   - அருமையான வளங்களை ஒதுக்கீடு செய்தல்

COMMERCE & BUSINESS STUDIES BRANCH

03.

1.

| பொருளாதார பண்டம் | பொருளாதாரமல்லாப் பண்டம் |
|---|---|
| • நிரம்பலில் அருமைத்தன்மை காணப்படும | • பூச்சிய விலையில் எல்லையற்ற நிரம்பலைக் கொண்டிருக்கும். |
| • வளச் செலவும் அமையச் செலவும் காணப்படும்.<br>உதாரணம்: புத்தகம், பேனை, அரிசி, மா போன்றவை. | • வளங்களுக்கான செலவோ அல்லது அமையச் செலவோ தோன்றாது.<br>உதாரணம்: இயற்கையிலிருந்து பெறப்படும் வளிமண்டலம், நீர், சூரியஒளி |

2. <u>உழைப்பின் பண்புகள்</u>
   - உயிருள்ள உற்பத்திக் காரணியாகும்.
   - அசைவுத்தன்மை கொண்டது.
   - ஓரினத் தன்மையற்றது.
   - கல்வி, பயிற்சி என்பவற்றின் மூலம் உழைப்பின் வினைத்திறனை உயர்த்தலாம்.
   - தீர்மானம் மேற்கொள்ளவும் ஒழுங்கமைக்கவும் முடிதல்.
   - உழைப்பிற்கான கொடுப்பனவு சம்பளமாகும்.

3.

| மனித மூலதனம் | பொருளாதார பொது செயற்பாட்டு மூலதனம் |
|---|---|
| • ஊழியர்கள், தொழிலில் பயிற்சி, ஆராய்ச்சி, அனுபவம், சுகாதார நிலை என்பவற்றுள் ஊழியரிடம் பொதிந்துள்ள தேர்ச்சி மானிட மூலதனமாகக் கருதப்படும். | • பொருளாதாரத்தில் பொருள், சேவை உற்பத்தியையும் பங்கீட்டுச் செயற்பாட்டை இலகுபடுத்துகின்ற மூலதனப் பண்டம் பொருளாதார பொது செயற்பாட்டு மூலதனமாகக் கருதப்படுவதுடன், இவை பொருளாதாரக் கீழ் கட்டமைப்பு வசதிகளாகக் கருதப்படும். |
| உதாரணம்: திட்டமிடல் நுட்பவியலாளர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பயிற்சிபெற்ற ஆசிரியர்கள், விசேட வைத்தியர்கள் | உதாரணம்: துறைமுகம், விமான நிலையம், நீர் வழங்கல் வடிகாலமைப்பு, பெருந்தெருக்கள் போன்றவை. |

4. (அ) அமையச் செலவு என்பது ஒரு நிதி ரீதியான எண்ணக்கருவல்ல. ஒரு மெய் ரீதியான எண்ணக்கருவாகும். அதாவது அமையச் செலவானது மாற்றுத் தெரிவுகளில் ஒரு தெரிவினை மேற்கொள்ளும்போது இழக்கப்படுகின்ற அடுத்த சிறந்த மாற்றுத் தெரிவின் மெய் ரீதியான பெறுமதியாகும். அதன் நிதி ரீதியான பெறுமதி அல்ல.
   (ஆ) அமையச்செலவு பூச்சியமாகும் சந்தர்ப்பங்கள் பலவாகும்.
   - வளங்கள் எல்லையற்றுக் காணப்படுதல் (பொருளாதாரமல்லாப் பண்டங்கள் காணப்படுதல்)
   - ஏதாவதொரு வளத்தில் மாற்றுப் பயன்பாடு இல்லாதிருத்தல்.
   - வளங்கள் வேலையற்றிருத்தல்.

5.


| கட்டளைப்பொருளாதாரம் | சந்தைப் பொருளாதாரம் |
|---|---|
| • கொள்வனவு செய்யும் சக்தியின் அடிப்படையில் உற்பத்திகள் விநியோகிக்கப்படுகிறது. | • வருமானம் மற்றும் விலை நிலைகளின் அடிப்படையில் அரச கட்டுப்பாட்டின் மூலம் உற்பத்தி விநியோகிக்கப்படுகிறது. |

COMMERCE & BUSINESS STUDIES BRANCH


**<u>சிற்றினப் பொருளியல் எண்ணக்கருக்கள்</u>**

04.

1. (அ) **<u>அருமை</u>**





**<u>மாற்றுப்பயன்பாடு</u>**





**பேரினப் பொருளியல் எண்ணக்கருக்கள்**

(ஆ) **<u>குறைதொழில் மட்டம்</u>**




**<u>பொருளாதார வளர்ச்சி</u>**




COMMERCE & BUSINESS STUDIES BRANCH

2. (அ) உற்பத்திச் சாத்திய வளையியின் வழியே செல்கையில் ஒரு பண்ட உற்பத்தியைக் குறிப்பிட்ட அளவு வீதம் அதிகரிக்கும்போது மற்றைய பண்டத்தில் இழக்கப்படும் அளவு மாற்றமின்றி இருக்கும் நிலைமையானது நிலையான சந்தர்ப்பச்செலவு என அழைக்கப்படும்.
(ஆ)

- வளங்கள் ஓரினத்தன்மை அற்றவை.
- ஒரு உற்பத்திக்குத் தேர்ச்சி வாய்ந்த வளம் இன்னுமொரு உற்பத்திக்குத் தேர்ச்சியற்றிறுத்தல்.
- ஒரு உற்பத்திக்குப் பயன்படுத்தும் வினைத்திறனான வளங்கள் மற்றொரு உற்பத்திக்கு வினைத்திறனற்றதாக இருத்தல்.


3.

- உழைப்புத் தவிர்ந்த ஏனைய உற்பத்தி வளங்களின் உரிமை அரசுக்குரியது.
- அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்குத் திட்டமிடற் செயற்பாட்டைப் பயன்படுத்தும்.
- சமூகநலனின் அடிப்படையில் செயற்படல்
- பொது நலனுக்காகச் செயற்படுதல்.


4. வளங்கள் தனியாருக்கு சொந்தமாக காணப்படுவதுடன் அவற்றை பயன்படுத்தல் தொடர்பான தீர்மானம் அரசினால் எடுக்கப்படும் பொருளாதார முறையாகும். சந்தைப் பொருளாதார முறையில் சமூக நியாயத்துவத்தை ஏற்படுத்துவதற்கு அரசு தலையிடுகின்ற பொருளாதார முறை சமூக சந்தைப் பொருளாதார முறையாகும். அதாவது சமூக நியாயத்துவத்தில் அதிகளவில் கவனம் செலுத்துகின்ற பொருளாதார முறை சமூக சந்தைப் பொருளாதாரமாகும்.

5.

- பொருளாதார மந்த நிலை இலங்கையில் குறுகிய காலத்திற்கு ஏற்படுமாக இருந்தால் அதனை உற்பத்தி சாத்திய வளையியில் இவ்வாறு காட்டலாம்.





- பொருளாதார மந்த நிலை இலங்கையில் நீண்டகாலத்திற்கு ஏற்படுமாக இருந்தால் அதனை உற்பத்தி சாத்திய வளையியில் இவ்வாறு காட்டலாம்.




COMMERCE & BUSINESS STUDIES BRANCH

05.

1. – வளங்களின் அருமை
   – வளங்களின் மாற்றுப்பயன்பாடு
2. அருமை என்பது எல்லையற்ற மனித தேவைகளை பூர்த்தி செய்வதற்கு சமூகத்தில் காணப்படும் வளங்கள் பற்றாக்குறையாக காணப்படுவதாகும்.




அடையமுடியாத உற்பத்தி சேர்க்கை A ஆகும் . காரணம் வள அருமை.

3.

(அ) மூலதனம் என்பது உற்பத்திச் செயற்பாட்டில் உறுதுணையாகப் பயன்படுத்தப்படும் ஒரு மெய்ச்சொத்தாகும். பணத்தைப் பயன்படுத்தி உற்பத்திக்குத் தேவையான மெய்ச் சொத்துக்களைப் பெற்றுக் கொண்டு பயன்படுத்தலாமே ஒழிய பணத்தை உற்பத்திச் செயற்பாட்டில் ஒரு மெய்ச் சொத்தாகப் பயன்படுத்த முடியாது. இதனால், பொருளியலில் பணம் ஒரு மூலதனமாகக் கருதப்படுவதில்லை.

(ஆ) **முதலீடு**

- வெளிநாட்டு முதலீடு
- உள்நாட்டு முதலீடு – வீட்டுத்துறை சேமிப்பு, வணிக சேமிப்பு, அரசு சேமிப்பு

4. அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகச் சமூகத்தினுள் வாழும் மக்கட் பிரிவினரால் தயாரிக்கப்பட்ட ஒரு இயந்திரம் அல்லது நிறுவன ரீதியான செயல் திட்டம் பொருளாதார முறை அல்லது பொருளாதார ஒழுங்கமைப்பு எனப்படும்.

**நிறுவன கட்டமைப்புக்கள்**

- வீட்டுத்துறை
- அரத்துறை
- வணிகப்பிரிவுகள்
- தொழிலாளர் அமைப்புக்கள்
- அரசல்லா அமைப்புக்கள்
- சந்தைகள்
- ஊக்குவிப்புக்கள்
- சட்டக் கட்டமைப்புக்கள்
- பழக்கவழக்கம், மரபுகள், கலாசாரம்.

5.

- வரி விதித்தல்
- குறைந்த வருமானம் உள்ளோருக்கு மானியம் வழங்குதல்
- வளர்ச்சித் திட்டங்களை முன்னெடுத்தல்.
- கல்வி, சுகாதார துறைகளில் முதலீடுகளை விரிவுபடுத்தல்
- அத்தியவசிய பண்டம் மீது குறைவான வரியை விதித்தல்.
- சொத்து மீது கட்டுப்பாடுகளை விதித்தல்.

COMMERCE & BUSINESS STUDIES BRANCH